டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 19.10.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 100 - Madurai | Online Edition

# விவசாயிகளின் வசதிகளுக்கு ஏற்ப ஊரக வங்கிகள் தங்களது சேவைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்

## மத்திய நிதியமைச்சர் பரிந்துரை

புது தில்லி, அக்.18

விவசாயிகள் உற்பத்தி அமைப்பின் தேவைகள் மற்றும் வசதிகளுக்கு ஏற்ப ஊரக வங்கிகள் தங்களது சேவைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பரிந்துரைத்துள்ளார்.

கர்நாடகா மாநிலம் பெல்லாரியில் கர்நாடகா கிராமிய வங்கிகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் கடந்த புதன்கிழமை (16.10.25) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நிதிசார் சேவைகள் துறைச் செயலர் எம்

நாகராஜ், நபார்டு வங்கித்தலைவரும் கனரா வங்கியின் செயல் இயக்குநருமான கே வி ராஜி மற்றும் துறை சார்ந்த மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

கிராமிய வங்கிகளில் கடனுதவிகள், வராக்கடன் மற்றும் நிதிசார் சேவைகள் தொடர்பான செயல்திறன், அரசின் திட்டங்களை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் போன்ற பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்தார்.



**அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

**விடுமுறை அறிவிப்பு**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அக்ரிடாக்டர்.இன் அலுவலகத்திற்கு 20.10.25 மற்றும் 21.10.25 ஆகிய இரண்டு நாட்கள் விடுமுறை. எனவே எமது அடுத்த மின்னிதழ் 23.10.25 வியாழக்கிழமை வெளிவரும்.

- நிர்வாகி

வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கு ஏற்ப முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் கவனம் செலுத்துவதுடன் வேளாண் கடனுதவி திட்டத்தை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கு வதற்கான நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இப்பகுதியில் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கான வாய்ப்பு களைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை வங்கிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கர்நாடகா கிராமிய வங்கிகள் மற்றும் கனரா வங்கி ஆகியவை அம்மாநில அரசின் துறை சார்ந்த கடனுதவி திட்டங்களை அதிகரிப்பதுடன் எம்எஸ்எம்இ மற்றும் அது சார்ந்த துறை களுக்கும் கடனுதவியை விரிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் குறைக்கப் பட்டுள்ளதை அடுத்து நுகர்வு, அதிகரித்துள்ளதன் காரணமாக கிராமப்புற பகுதிகளில் புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார். இதனைக் கருத்தில் கொண்டு வங்கிகள் கடனுதவி களை அதிகரிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வெற்றி நிச்சயம் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 25 நாட்கள் இலவச திறன் சார்ந்த காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், அக்.18

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வெற்றி நிச்சயம் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 25 நாட்கள் இலவச திறன் சார்ந்த காளான் வளர்ப்பு பயிற்சி 27.10.25 முதல் 25.11.25 வரை நடைபெற உள்ளது. பயிற்சியில் கோவை மாவட்டத்தை சார்ந்த பட்டதாரி, டிப்ளமோ, விவசாயிகள் மற்றும் பெண்கள் 18 முதல் 45 வரை வயதுள்ளவர்கள் பங்கு கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க : 0422-6611336, 96269 49655, 63792 98064.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நெற்பயிர்களில் பச்சைப்பாசி கட்டுப்படுத்த ஆலோசனை



புதுக்கோட்டை, அக்.18

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தில் நெல் வயல்களில் பாசி தாக்கு தலை கட்டுபடுத்தும் வழிமுறைகள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ரஹ்மத் நிஷா பேகம், வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

பொன்னமராவதி வட்டாரத்தில் தற்போது சம்பா சாகுபடி 1200 ஏக்கர் பரப்பளவில் செய்யப்பட்டு உள்ளது. மேலும் நடவு செய்யப் பட்டுள்ள வயல்களில் பாசியின் தாக்குதல் காணப்படுகிறது. பாசியானது முழுவதுமாக வயல் களில் படர்ந்து விடுவதால் நெல் பயிர் வேரின் வளர்ச்சிக்கு தேவையான காற்றோட்டம் முழுவதும் கிடைக்காமல் தடுக்கப் படுகிறது. மண்ணில் இருந்து நெற் பயிர்கள் சத்துக்கள் எடுத்துக் கொள்ளப்படுவதும் தடுக்கப்படுகிறது.

பாசிகள் உள்ள வயல்களில் ஹைட்ரஜன் சல்பைட் அதிகளவில் வெளியேறுவதால் கொத்து கொத்தாக பயிர்கள் காய்ந்து மகசூல் இழப்பு ஏற்படும். கரையும் பாஸ்பரஸ் அதிகம் உள்ள நிலங்களில் பாசியின் தாக்குதல் அதிகளவில் காணப் படும். பாசியின் தாக்குதல் அதிகமாக உள்ள நிலங்களில் டி.ஏ.பி உரத்தை அதிகளவில் இடுவதை தவிர்க்க வேண்டும். 1 ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் காப்பர் சல்பேட் 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவவேண்டும் அல்லது இந்த மருந்தை முடிச்சாகக் கட்டி வயலில் ஆங்காங்கே வைக்கலாம் அல்லது தண்ணீர் பாய்ச்சும் போது இந்த மருந்தை வாய்மடையில் வைத்து வயல் முழுவதும் சீராக பரவச்செய்து கட்டுபடுத்தலாம் என்று கூறியுள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மக்காச்சோள சாகுபடி பரப்பினை அதிகரிக்க இலக்கு நிர்ணயம்




கோயம்புத்தூர், அக்.18

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுல்தான்பேட்டை வட்டாரத்தில் மக்காச்சோளம், சோளம், தட்டைப் பயறு, பாசிப் வகைப் பயிர்கள் தனிப்பயிராகவும், தென்னையில் ஊடுபயிராகவும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது மக்காச்சோளத்தில் சாகுபடி பரப்பினை அதிகரிக்க இலக்கு பெறப்பட்டு செய்ய விவசாயி களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்விளக்கத்திடல் அமைக்க இடுப்பொருட்கள் விலையில் வழங்கப்பட்டுள்ளது.

சோளத்தில் அதிக மகசூல் தரக்கூடிய 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட ரகங்களான கோ-32 கே-13 போன்ற உயர் விளைச்சல் இரகங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. 2.5ஏக்கர் பரப்பளவில் சோளம் மற்றும் பாசிப்பயறு செயல்விளக்கத்திடல் அமைக்க தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்துகள் திட்டத்தின் கீழ் 50 சதவிததில் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

மேலும் நிலக்கடலை, எள் பயறுவகை மற்றும் தானியங்களில் அதிக மகசூல் மற்றும் மண்ணில் வளத்தினை காக்கவும், நுண்ணூட்டக் கலவைகள், உயிர் உரங்கள் மற்றும் தார்பாய்கள் மானிய விலையில் வழங்க இலக்குகள் பெறப்பட்டுள்ளது.

பயறு வகை மற்றும் சோளத்தில் விதைப்பண்ணை ஆய்வில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) அருள்கவிதா, துணை வேளாண்மை அலுவலர் எழில் அரசு, வேளாண்மை உதவி அலுவலர் கந்தசாமி, தொழில் நுட்ப உதவியாளர் சூர்யபிரகாஷ் ஆகியோர் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுப் பொருட்கள் வழங்கினர்.

மேலும் விபரங்களுக்கு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் அல்லது உழவர் செயலி -யின் மூலம் அனுகலாம்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் PMIST- ஐ பார்வையிட்டனர்

கோயம்புத்தூர், அக்.18

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (AEC&RI), கோயம்புத்தூர் சார்ந்த பி.டெக். (வேளாண் பொறியியல்) மாணவர்கள் சமீபத்தில் ஒரு அனுபவ கல்வி களப்பயணத்தை மேற்கொண்டனர்.

## அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்




இந்த பயணத்தை முனைவர் அ.ரவிராஜ், முதன்மையர் (வேளாண் பொறியியல்) தலைமையில், முனைவர் ஜெ.இராமச்சந்திரன் (மண் மற்றும் நீர் பாதுகாப்பு துறை) மற்றும் முனைவர் ர.திவ்யாபாரதி (புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறை) ஒருங்கிணைத்தனர். இப்பயணத்தின் நோக்கம் மாணவர்களுக்கு நிலைத்துவமான வேளாண் வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேலாண்மை குறித்து முழுமையான புரிதலை வழங்குவதாகும்.




மாணவர்கள், பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (PMIST), தஞ்சாவூரில் அமைந்துள்ள உயிரி ஆற்றல் உயராய்வு மையத்தை பார்வையிட்டனர். இங்கு இந்தியாவின் முதல் 500 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட பன் மூல உயிரி வாயு உற்பத்தி ஆலை அமைக்கப்பட்டுள்ளது. இது உயிரி கழிவுகளிலிருந்து 60 கிலோ வாட் மின்னாற்றலை உருவாக்குகிறது. மேலும், அந்த ஆலையில் உருவாகும் செரித்த சாணக்கரைசல், மண்புழு உரம் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், மாணவர்கள் அங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பிற பசுமை முயற்சிகள் குறித்தும் பார்வையிட்டனர்.

பயன்படுத்தப்பட்ட தேர்வுத் தாள்கள், காகித மறுசுழற்சி ஆலையம் மூலம் புதிய கோப்புகளாக தயாரிக்கப்படுவது மற்றும் சுத்திகரிக்கப் பட்ட கழிவு நீரைப் பயன்படுத்தி பாசனம் செய்யப்படும் 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட மூங்கில் காடு ஆகியவற்றைக் கண்டு கற்றறிந் தனர். இந்தப் பயணம், மாணவர்களுக்கு வகுப்பறை அறிவையும் நடைமுறை அனுபவத்தையும் இணைக்கும் சிறந்த வாய்ப்பை வழங்கின. இது, எதிர்காலத்தில் நிலைத்துவமான வேளாண் ஆற்றல் மேலாண்மைக்கான முக்கியக் கற்றல் அனுபவமாக அமைந்தது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# இயற்கை விவசாயத்தை நோக்கிச் செல்லும் விவசாயிகள்




இயற்கை விவசாயம் செய்வது குறித்த விழிப்புணர்வு தற்போது விவசாயிகளிடையே அதிகரித்து வருகிறது. இயற்கை விவசாயம் செய்வதற்கு பலரும் முன் வருகின்றனர். இடுபொருள்கள் தாராளமாக கிடைக்கும் பட்சத்தில் இயற்கை விவசாயி களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்கிறார் இயற்கை விவசாயியும் திருநெல்வேலி இயற்கை விவசாயிகள் சங்கத்தின் செயலாளருமான எஸ்.ஏ.சுப்பிரமணியம்.

கர்நாடக மாநிலம், மாண்டியா மாவட்டம், சாத்தனஹள்ளியைச் சேர்ந்தவர் இயற்கை விவசாயி குமாரசாமி. இவர் இயற்கை விவசாயத்தை பல ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறார். இவர் இயற்கை விவசாயத்தில் பல்வேறு ஆய்வுகளை மேற் கொண்டு, புது மாடல் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார். இவரைப் பின்பற்றி பலரும் இயற்கை விவசாயத்தை மேற் கொண்டு வருகின்றனர். இவர் முதலில் சுபாஷ் பாலேகரின் மாடலைப் பின்பற்றி இயற்கை விவசாயம் செய்தார். பின்னாளில், இவர் தனக்கென ஒரு முறையைப் பின்பற்றத் தொடங்கினார். அதாவது, One Lakh, One Acre, One Month என்பதே இவரது கொள்கையாகும். கர்நாடக மாநிலத்தில் இவரது மாடலைப் பின்பற்றி பலரும் இயற்கை விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கர்நாடக விவசாயி குமாரசாமியைப் பின்பற்றி சுப்பிர மணியமும் இயற்கை விவசாயத்தை மேற்கொண்டு வருகிறார். 55 வயதான சுப்பிரமணியம், பொருளாதாரப் பாடத்தில் பி.ஏ. பட்டம் பெற்றுள்ளார். முதலில் மாற்றுத் தொழிலில் ஈடுபட்டிருந்த இவர், கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் இயற்கை விவசாயத்தில் காலடி எடுத்து வைத்தார். இவர் தொடங்கியதே இயற்கை விவசாயத்தில் தான்.

அதனால் இவருக்கு ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் குறித்து பரிச்சயம் இல்லை என்றே சொல்லலலாம்.



இவரது விவசாயப் பண்ணை, திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் அருகே களியன்குளம் என்ற இடத்தில் உள்ளது. சுமார் 40 ஏக்கர் பரப்பளவில் மா, நெல்லி ஆகியவற்றைப் பயிரிட்டு வந்த இவர், தற்போது 15 ஏக்கர் பரப்பில் மாங் கன்றுகளை உற்பத்தி செய்து வருகிறார். இவரது பண்ணையில், இமாம் பசந்த், செந்தூரம், நீலம், காலம்பாடு என சுமார் 10 வகையான ரகங்களை உற்பத்தி செய்து வருகிறார். மேலும், 1 ஏக்கர் பரப்பளவில் தக்காளி, கீரை வகைகள், படர் கொடிகளையும் சுப்பிரமணியம் பயிரிட்டு வருகிறார். இதில், கர்நாடக விவசாயி குமாரசாமியின் 5 அடுக்கு விவசாய முறையைப் பின்பற்றி வருகிறார்.

நம்மாழ்வார், சுபாஷ் பாலேகர் ஆகியோரின் முறைகளையும் நன்கு அறிந்துள்ளார். ஈா யோகா மையத்தில் பயிற்சிகளில் பங்கேற்றுள்ளார். இடுபொருள்களான மீன் அமிலம், பஞ்ச காவ்யம் ஆகியவற்றையும் இவரே பண்ணையில் தயாரிக்கிறார். இவற்றை தமது சொந்த உபயோகத்துக்கும், பிற இயற்கை விவசாயிகளுக்கும், பிறருக்கும் இலவசமாக வழங்கி வருகிறார்.

இடுபொருள்கள் தயாரிப்பதற்காகவே 15 மாடுகளையும் வளர்த்து வருகிறார் சுப்பிரமணியம். யூரியா, பொட்டாஷ் போன்ற ரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண் வளம் கெட்டுவிட்டது. ரசாயனப் பூச்சிக் கொல்லிகளால் உடல் நலப் பாதிப்பு ஏற்படு கிறது. இவற்றில் இருந்து விடுபடவே இயற்கை விவசாயத்தைப் பின்பற்றுகிறோம். இயற்கையாகத் தயாரிக்கப்படும் இடு பொருள்கள், பூச்சி விரட்டிகளைப் பயன்படுத்துவதன் மூலம் 3 ஆண்டுகளில் நிலம் சீரடைகிறது. அதன் பிறகு இயற்கை விவசாயத்தின் மூலம் அதிக மகசூலை நம்மால் பெற முடியும். தற்போது 15 வகை காய்கறிகள், 10 வகை கீரைகளைப் பயிரிட்டு வருகிறேன் என்கிறார் சுப்பிரமணியம்.

2007ல் நம்மாழ்வார் ஐயாவைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதன்பிறகு இயற்கை விவசாயத்தில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்தது. நஞ்சில்லா உணவு சாப்பிட வேண்டும்,

மற்றவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினேன் என்கிறார். சுபாஷ் பாலேகர் நடத்திய பயிற்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தப் பயிற்சியால் பெரிய தாக்கம் ஏற்பட்டதாகக் கூறுகிறார்.



இயற்கை விவசாயப் பயிற்சியாளராக இருப்பதாகக் கூறும் சுப்பிரமணியம், மாட்டுத் தீவனம் தயாரிப்போருக்கு மீன் அமிலத்தை இலவசமாக அளிப்பதாகக் கூறுகிறார்.

திருநெல்வேலி இயற்கை விவசாயிகள் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி, அதன் செயலாளராக உள்ளதாகக் கூறும் சுப்பிரமணியன், அதில் 200 விவசாயிகள் உறுப்பினர் களாக உள்ளதாகக் கூறுகிறார். இந்த சங்கத்தின் மூலம் விளைபொருள்களுக்கான நேரடி விற்பனை சந்தையை ஏற்படுத்தித் தருவதாகவும், மதிப்புக்கூட்டுப் பொருள்களைத் தயாரித்து வழங்குவதாகவும், இயற்கை விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதாகவும் கூறுகிறார். பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்கு மாதந்தோறும் கூட்டங்கள் நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விற்பனை மையம் குறித்து அவர் மேலும் கூறியது – இந்த விற்பனை மையத்தில் காய்கறிகள், கீரைகளின் விற்பனை நன்றாகவே இருந்தது. மக்களிடையே வரவேற்பும் அதிகமாக இருந்தது. மதிப்புக்கூட்டுப் பொருள்களையும் தயாரித்து, விற்பனை செய்யத் தொடங்கினோம். நல்ல விலையும் கிடைத்தது. இந்த விற்பனை மையத்தில் நன்கு படித்தவர்கள், விளைபொருள்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்கின்றனர். தாமிரா என்ற வணிக முத்திரையில் இயற்கை விவசாயிகள் தங்களது பொருள்களை விற்பனை செய்கின்றனர். தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்யும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதில் சுமார் 350 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

சிறு தானிய உணவுகள், பாரம்பரிய அரிசி, சோப், பற்பொடி, சாக்லேட், தினை உருண்டைகள், வாஷிங் திரவம் உள்ளிட்ட பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

நபார்டு நிறுவனத்துடன் இணைந்து பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. ஆன்லைன் விற்பனையும் தொடங்கப்பட்டுள்ளது. மருத்துவர்கள் அதிகளவில் வாடிக்கையாளர்களாக உள்ளனர். நியாயமான விலையே நிர்ணயிக்கப்படுகிறது. கணேஷ்ராஜா எங்களுக்கு ஒரு பயிற்சி மையத்தை ஏற்படுத்திக் கொடுத்து உள்ளார். பயிற்சி பெறுவோருக்கு அவரே உணவு வழங்குறார் என்றார் சுப்பிரமணியம்.

இயற்கை விவசாயம் செய்வதற்கு மாடு அவசியம். பல விவசாயிகளிடம் தற்போது அது ஒரு பிரச்சினையாக உள்ளது. மேலும், இடுபொருள்கள் தாராளமாகக் கிடைக்க வேண்டும். இயற்கை இடுபொருள் விற்பனை மையங்களை ஒவ்வொரு ஊராட்சியிலும் நிறுவ வேண்டும்.






இத்தகைய விற்பனை மையங்கள் அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாய் வரை மானியம் அளிக்கப்படுகிறது என்கிறார் சுப்பிரமணியம்.

இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்து இதுவரை சுமார் 1000 விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளித்துள்ளேன் என பெருமிதத்துடன் கூறுகிறார் சுப்பிரமணியம்.

**தொடர்புக்கு : +91 99948 76697.**

# அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

DOCTOR OF ASTROLOGY

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும்
தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை
மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# குறைந்த பட்ச ஆதார விலை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது?

குறைந்த பட்ச ஆதார விலை என்பது (MSP) அரசு நிர்ணயிக்கும் விலையாகும். இதன் மூலமாக விவசாயிகளின் விளைபொருட்களை வாங்குகிறது. விற்பனை சார்ந்த ஏற்ற இறக்கங்கள் காரணமாக அவர்கள் இழப்பை சந்திக்காமல் இருப்பதை உறுதி செய்ய இந்த விலை உதவுகின்றன.

இந்தியாவின் விவசாய சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக இந்த குறைந்த பட்ச ஆதார விலை (MINIMUM SUPPORT PRICE) முதன்முதலாக 1966-67யில் அறிமுகப்படுத்தப் பட்டது.

**MSP நிர்ணயிக்கும் செயல் முறைகள்?**

விவசாய செலவுகள் மற்றும் விலைக்களுக்கான கமின் (CACP) பரிந்துரையின் படி, பயிர் செய்ய ஆகும் செலவுகள், குடும்ப உழைப்பு மற்றும் பிற செலவுகளை கருத்தில் கொண்டு னிறீஷீண, நிர்ணயிக்க பரிந்துரைக்கப்படுகிறது. உள் நாட்டு மற்றும் சர்வதேச விலை நிலவரம், பல்வேறு பயிர்களுக்கு இடையே விலை சமநிலைத் தன்மை ஆகிய காரணிகளை அடிப்படையாக கொண்டு தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்து பயிர்களின் விளைப்பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயிக்க படுகிறது.

**விவசாயிகள் செலவு கணக்கீடு முறை**

A2- நேரிடையாக சாகுபடிக்கான செலவு

FL- குடும்ப உழைப்பு

C2- நிலையான சொத்துக்களுக்கான செலவு

வேளாண்மை அமைச்சகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம் மாநில வாரியாக பயிர் சார்ந்த உற்பத்தி செலவுகள் மதிப்பிடப்பட்டு அதன்படி ( னிறீஷீண) நிர்ணயிக்கப்படுகிறது.

**எந்த எந்த விவசாய விளைப்பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்படுகிறது?**

23 பயிர்களுக்கு இந்திய அரசு ஆண்டுக்கு இரு முறை (ராபி, காரீப்) பருவங்களில் நிர்ணயிக்கப்படுகிறது. காரீப் பருவத்தில் 14 பயிர்களுக்கும், ராபி பருவத்தில் 7 பயிர்களுக்கும் 2 பண பயிர்களுக்கும் நிர்ணயிக்கப்படுகிறது.

**குறைந்த பட்ச ஆதார விலையால் விவசாயிகளுக்கு நன்மையா?**

1) உற்பத்தி செலவை விட குறைந்த பட்சமாக 50% லாபம் கிடைக்கும்.

2) இந்திய முழுவதும் விவசாயிகளின் சாகுபடி செலவு அடிப் படையில், 1.5 மடங்கு விலை உயர்த்தப்படுவதால் கூடுத லான வருவாய் கிடைக்கும்.

3) அரிசி, கோதுமை போன்ற உணவு தானியங்களை உணவு பாதுகாப்பை (FOOD SECURITY) உறுதி செய்து மத்திய தொகுப்புக்கு கொள்முதல் நுகர்வோர் வாணிப கழகம் மூலமாக கொள் முதல் செய்யப்படுகிறது.

**2025-26யில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஆதார விலை எவ்வளவு ?**

| பயிர் | விலை | அதிகரிப்பு |
|---|---|---|
| 1) நெல் | 2369 | 69 |
| 2) மக்காசோளம் | 2400 | 175 |
| 3) சோளம் | 3699 | 328 |
| 4) கம்பு | 2775 | 150 |
| 5) ராகி | 4886 | 596 |
| 6) துவரை | 8000 | 450 |
| 7) உளுந்து | 7800 | 400 |
| 8) பச்சைபயறு | 8768 | 86 |
| 9) நிலக்கடலை | 7263 | 480 |
| 10) எள் | 9846 | 579 |

கடந்த பருவத்தை விட அனைத்து விலைகளும் அதிகரித்து உள்ளன.

இதற்கிடைய அந்தந்த மாநில அரசுகள் ஊக்கதொகை வழங்கும். நமது மாநில அரசு கூட நெல் விளைப்பொருளுக்கு னிறீணே யுடன் கூடுதலாக ஊக்கத் தொகை வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மழைக்காலங்களில் பயிர் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள்

## முன்னெச்சரிக்கை நடவடிக்கை கடைபிடிக்க கேவிகே அறிவுரை



திருச்சி, அக்.18

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் பல்வேறு வேளாண் சார்ந்த நிகழ்வுகள் பயிற்சிகள் அவ்வப்போது கொடுக் கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மழைக்காலங்களில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் ஏற்படும் பூச்சி நோய் தாக்குதல்களை முன்னெச் சரிக்கை நடவடிக்கை எடுத்து எவ்வாறு பாதுகாக்கலாம் என்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை வேளாண் அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் முனைவர் மாரிமுத்து வரவேற்றார்.

நிகழ்ச்சிக்கு தலைமை உரையாற்றிய சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி ராஜா பாபு மழைக்காலங்களில் விவசாய பெருமக்கள் பயிர் களில் தோன்றும் நோய்கள் மற்றும் பூச்சிகளின் தாக்குதல் களின் அறிகுறிகளை கண்டறிந்து அதற்கு ஏற்றவாறு பூச்சி மற்றும் நோய் மருந்துகளை பயன்படுத்துவது மூலம் மகசூலை அதிகரிக்கலாம் என்றார்.

மேலும் பூச்சி, நோய் தாக்குதல் அறிகுறிகள் தென்பட்டவுடன் அருகில் உள்ள வேளாண், தோட்டக்கலை அலுவலகத்தையோ அல்லது வேளாண் அறிவியல் நிலையத்திலோ நேரில் தொடர்பு கொண்டு அதற்கு ஏற்றவாறு மருந்துகளை உபயோகிக்க வேண்டும் என்றார். மேலும் இந்த நிகழ்வில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நோய்கள் துறை இணை பேராசிரியர் முனைவர் ராஜேஷ் கலந்து கொண்டு மழைக்காலங்களில் பயிர்களில் தோன்றும் நோய்கள் அவற்றை கட்டுப்படுத்துவது எப்படி என்பதை பற்றி விரிவாக விளக்கினார்.

இந்த விவசாய கருத்தரங்கில் கீழ்காணும் தொழில்நுட்பங்கள் விவாதிக்கப்பட்டது.

தற்போது சம்பா பருவ நெல் சாக்குபடியில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. தூர் வெடிக்கும் பருவத்தில் இருந்து, பால் பிடிக்கும் பருவம் வரை பயிர்கள் உள்ளன. தொடர் மழையால் வயலில் நீர் தேங்காமல் உடனே வடிந்து விட வேண்டும். இதனால் வேர் அழுகல் தவிர்த்து காற்றோற்றமான வேர் பகுதியை பராமரிக்கலாம். தூரல் மழையால் குழை நோய் (blast) மற்றும் உரை அழுகல் நோய் தாக்கம் காணப்படும்.



அதனை தடுப்பதற்கு டிரைசைக்லசோல் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கலாம்.

பூக்கும் தருணத்தில் உள்ள பயிர்களில் கரிப் பூட்டை நோய் வருவதற்கான மேகமூட்டமான வானிலை நிலவுவதால் முன்னெச்சரிக்கையாக புரோபிகோன சோல் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற அளவில் தெளித்து நோய் வராமல் பாதுகாக்கலாம்.

பயறு வகைப் பயிர்களில் மழைநீர் தேங்குவதால் எளிதாக வேறு அழுகல் நோய் பரவக் கூடும். அதனால் நீரை நன்றாக வடிந்து விடவேண்டும்.இலைவழித்தெளிப்பாக பேரூட்டம் மற்றும் நுண்ணுட்டங்கள் வழங்குவதால் செடியின் சத்து குறைபாடுகளை தவிர்க்கலாம்.

வேர்அழுகல் நோயின் அறிகுறியாக செடியின் கீழ்புறத்தில் இருந்து இலைகள் மஞ்சள் நிறமாக மாறி உதிர்ந்துவிடும் மேலும் செடியின் தண்டுப்பகுதியை குறுக்காக வெட்டிப் பார்த் தால் பழுப்பு நிறத்தில் காணப்பட்டால் அது அழுகல் நோயாகும். அதனை கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைட் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைந்து பாதிக்கப்பட்ட செடி மற்றும் அருகில் உள்ள செடிகளுக்கும் வேர் நனையும்படி ஊற்ற வேண்டும்.

அதேபோல் மற்ற பயிர்களிலும் தொடர் மழையால் தேங்கிய நீரை வடித்து விட வேண்டும். பின் இலைவழி தெளிப்பாக சத்து குறைபாடுகளை தவிர்த்தால் மழையில் பயிர்களை மகசூல் இழப்பின்றி காத்துக் கொள்ளலாம் என கருத்தரங்கில் கூறப்பட்டது.

வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர் முனைவர் சகிலா நன்றி கூறினார். மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி. ராஜா பாபு தெரிவிக்கிறார்.



# கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் மகளிர்க்கு பயிற்சி



கன்னியாகுமரி, அக்.18

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் காளான் சாகுபடி குறித்து திறன் பயிற்சி வழங்கப் பட்டு வருகிறது. கடந்த சில நாட்களாக நடத்தப்பட்டு வரும் இப்பயிற்சியின் ஒரு பகுதியாக கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் வைத்து விற்பனை மற்றும் புதிய வேளாண்மை முறைகள் பற்றி பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியில் கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனம் தலைமை செயல் அதிகாரி சர்மி வரவேற்புரை வழங்கினார். பின்னர் பயிற்சியை வழங்கிய கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவன செயலாளர் பிரதீப் குமார் விற்பனை மற்றும் மேலாண்மை முயற்சிகள் பற்றி விளக்கி கூறினார் மேலும் கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் வைத்து கேக் வெட்டி திறன் பயனாளிகளுக்கு வரவேற்பு வழங்கப்பட்டு, தீபாவளி பண்டிகையும் கொண்டாடப் பட்டது.

இந்நிகழ்வில் பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி மைய வேளாண்மை விரிவாக இணை பேராசிரியர் முனைவர் ராஜ் ப்ரவின் சிறப்புரை வழங்கினார். மேலும் காளான் பயிற்சி பெறுபவர்களுக்கு குலசேகரம் ஒழுங்குமுறை ஒழுங்குமுறை விற்பனை கூட்டத்திலும் தேசிய வேளாண்மை சந்தையிலும் சேர்ந்து காளான் பொருட்களை விற்பனை செய்யப்பட்டது. காளான் பயிற்சியில் கலந்து கொண்ட 25 பேரும் ஒழுங்குமுறை விற்பனை கூட்டத்தில் விவசாயிகளுக்காக பதிவு செய்யப் பட்டனர். இறுதியாக பயிற்சியில் கலந்து கொண்ட ஜெரோலின் ஆஷிகா நன்றி உரை வழங்க பயிற்சி இனிதே நிறைவு பெற்றது.

# அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்


Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

## 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




### பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

**PRODUCT RANGES**

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

**RITHVIK PIPES PROUDLY TRUSTED BY**

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெற்பயிரில் காணப்படும் புகையான் கட்டுப்படுத்திட சிறுகமணி கேவிகே ஆலோசனை



திருச்சி, அக்.18

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நெல் பயிரில் தோன்றும் புகையான கட்டுப்படுத்த சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் ஆலோசனை வழங்கி உள்ளது.

நெல் புகையான் என்பது நெல் பயிரின் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும் ஒரு பூச்சியாகும். இது பயிரை மஞ்சள் அல்லது பழுப்பு நிறமாகமாற்றி, இறுதியில் காய்ந்து விடும் நிலையை ஏற்படுத்தும். இதைத் தடுக்க, தழைச்சத்து உரங்களை அதிகமாக இடுவதை தவிர்ப்பது, வயல்களில் நீர் வடிகால்களை முறையாக பராமரிப்பது மற்றும் எதிர்ப்பு சக்தி கொண்ட நெல் வகைகளை பயிரிடுவதுபான்ற வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

**தாக்குதலின்அறிகுறிகள்**

- நெற்கதிர்களில் உள்ள சாற்றை உறிஞ்சுவதால் பயிர் வலுவிழந்து சாயும்.
- தாக்குதல் தீவிரமடையும் போது பயிர்கள் முதலில் மஞ்சள் நிறமாகவும், பின்னர் பழுப்பு நிறமாகவும் மாறி, புகைந்தது போல தோன்றும்.
- நெல் வயல்களில் ஆங்காங்கே வட்டவடிவமாக சேதமடைந்த பகுதிகள் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

**உழவியல் முறைகள்**

● தழைச்சத்து உரங்களைஅதிகமாக பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

● தேவைக்கு அதிகமாக தழைச்சத்து உரமிடுவதைத் தவிர்க்கவும், ஒருமித்த நடவு செய்யவும்.

● சரியான இடைவெளியில் நெற்பயிர்களை நடவு செய்யவும், உதாரணமாக 8 அடிக்கு 1 அடி இடைவெளி.

**வேதியியல் கட்டுப்பாடு**

● புகையானின் வளர்ச்சிக்கு உதவும் மிதைல் பாரத்தியான் மற்றும் செயற்கை பைரித்ராய்டு மருந்துகளைப் பயன்படுத்தக் கூடாது.

● குளோரன்டிரினிலிப்ரோல், இமிடாகுளோபிரிட், பயோபுரோ பெசின் போன்ற மருந்துகளைப் பயன்படுத்தலாம்.

**பயிர் தேர்வு**

● புகையான் பூச்சிக்கு எதிர்ப்பு சக்தி கொண்டநெல் ரகங்களை பயிரிடவும்.

**நீர்வழி மேலாண்மை**

● புகையான் தாக்குதல் அதிகமாக உள்ள இடங்களில், 3-4 நாட்களுக்கு வயலில் இருந்து நீரை வடித்துவிட வேண்டும்.

**மற்றவை :** வயலில் பாசியைக் கட்டுப்படுத்த, ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ காப்பர் சல்பேட் இடலாம்.

மேலும், வயல் வரப்புகளை சுத்தமாக வைத்துக் கொள்ளவும், பசுந்தாள் உரப் பயிர்கள் பயன்படுத்தவும், யூரியா, டிஏபி போன்ற உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் மட்டுமே பயன் படுத்தவும், நெல் சாகுபடியை தொடர்ச்சியாக மேற்கொள்வதை தவிர்த்து பயிர் சுழற்சி மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயி களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே, விவசாயிகள் தங்கள் வயல்களில் பூச்சி நோய் தாக்குதல் அறிகுறிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து மேற்கண்ட தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. இதனை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவிக்கிறார்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாப்பதில் இயற்கை பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களின் பங்கு

இயற்கை என்பது மனித வாழ்க்கையின் அடிப்படைத் தளம். மனிதனின் ஒவ்வொரு மூச்சிலும், உணவிலும், தண்ணீரிலும், மண்ணிலும் இயற்கையின் பங்கு உள்ளது. ஆனால் கடந்த சில தசாப்தங்களில் தொழில்நுட்ப வளர்ச்சி, நகர்ப்புறமயமாக்கல், மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் தொழிற்துறை விரிவாக்கம் ஆகியவை இயற்கையின் சமநிலையை பெரிதும் பாதித்து உள்ளன. இந்த இயற்கை சமநிலை அழிந்தால், உயிரினங்கள் மட்டுமல்லாது மனித வாழ்வும் ஆபத்தில் தள்ளப்படும். இதனைத் தடுக்க அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதில் முக்கியமானவை இயற்கை பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும், உயிரினப் பன்மையை நிலைநிறுத்துவதற்கும் இவை பெரும் பங்காற்றுகின்றன.

**சுற்றுச்சூழல் அமைப்பின் அர்த்தம்**

சுற்றுச்சூழல் அமைப்பு என்பது இயற்கையில் உள்ள உயிருள்ள உயிரினங்களும் (மனிதன், விலங்குகள், தாவரங்கள், நுண்ணுயிரிகள்) மற்றும் உயிரில்லாத கூறுகளும் (காற்று, நீர், மண், ஒளி, வெப்பம்) ஒன்றோடு ஒன்று தொடர்புடைய அமைப்பாகும்.

இவற்றில் ஏதேனும் ஒன்று பாதிக்கப்பட்டால் மற்ற அனைத்தும் பாதிக்கப்படும். எனவே சுற்றுச்சூழல் அமைப்பின் சமநிலையைப் பேணுவது உயிரின வாழ்விற்கும் மனித வாழ்விற்கும் அவசிய மானது.

**இயற்கை பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங் களின் பொருள்**

இயற்கை பூங்கா என்பது ஒரு பரந்த பரப்பில் இயற்கை வளங் களையும், உயிரினங்களையும் பாதுகாக்க அரசால் அறிவிக்கப் பட்ட பகுதி ஆகும். இங்கு மனித நடவடிக்கைகள் மிகவும் கட்டுப்

படுத்தப்பட்டவையாக இருக்கும். வனவிலங்கு சரணாலயம் என்பது விலங்குகள், பறவைகள் மற்றும் பிற உயிரினங்கள் தங்கள் இயல்பான சூழலில் வாழ்வதற்காக பாதுகாக்கப்படும் வனப்பகுதி ஆகும். இங்கு வேட்டையாடல், மரவெட்டுதல், நில அபகரிப்பு போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் உள்ள முக்கிய இயற்கை பூங்காக்கள்**

**1. முதுமலை இயற்கை பூங்கா (நீலகிரி மாவட்டம்)**

● இது தமிழ்நாட்டின் பழமையான இயற்கை பூங்காக்களில் ஒன்று. யானைகள், புலிகள், மான்கள், கரடிகள் போன்ற பல்வேறு விலங்குகளின் வாழ்விடமாக உள்ளது.

● இது நீலகிரி உயிரியல் வலையத்தின் முக்கிய அங்கமாகும்.

**2. மன்னார் வளைகுடா கடல் உயிரியல் பூங்கா**

● கடல் உயிரினங்களின் பன்மையைப் பாதுகாக்கும் தனித்துவமான கடல் சார்ந்த பூங்கா.

● கடல் சார் பறவைகள், மீன்கள், பாசிகள் போன்ற உயிரினங்கள் இங்கு பாதுகாக்கப்படுகின்றன.

**3. குண்டா இயற்கை பூங்கா (கோயம்புத்தூர் மாவட்டம்)**

● மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள இந்தப் பூங்கா, பல்வேறு புல்வெளிகள் மற்றும் காடுகளைக் கொண்டது.

● இது காடுகளின் நீர்வளத்தை பாதுகாக்கும் முக்கிய இடமாகும்.

**4. இந்திரா காந்தி இயற்கை பூங்கா (ஆனைமலைப் பகுதி)**

● இது ஆனைமலை மலைத்தொடரின் ஒரு பகுதி. யானைகள், சிறுத்தைகள், குரங்குகள் போன்ற பல விலங்குகளின் இல்லமாக உள்ளது.

**தமிழ்நாட்டில் உள்ள முக்கிய வனவிலங்கு சரணாலயங்கள்**

**1. பெரியார் சரணாலயம் (தென்காசி மாவட்டம் அருகில்)**

● யானைகள், நீர்யானைகள், புலிகள் மற்றும் பல பறவைகள் வாழும் இடம்.

● பெரியார் ஆறு இப்பகுதியில் பாய்வதால் இது நீர்வளப் பாதுகாப்பிலும் பங்கு வகிக்கிறது.

**2. சத்தியமங்கலம் சரணாலயம் (ஈரோடு மாவட்டம்)**

● இது இந்தியாவின் மிகப் பெரிய வனவிலங்கு சரணாலயங்களில் ஒன்றாகும்.

● இது புலிகள் மற்றும் யானைகளின் முக்கிய வாழ்விடமாகவும் அறியப்படுகிறது.

**3. களக்காடு - முண்டந்துறை சரணாலயம் (திருநெல்வேலி மாவட்டம்)**

● மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரின் தெற்குப் பகுதியை உள்ளடக்கியது.

● மிகுந்த பசுமையும் பல்வேறு பறவைகளும் கொண்ட பகுதி.

**4. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் (செங்கல்பட்டு மாவட்டம்)**

● தென் இந்தியாவின் பழமையான பறவை சரணாலயம்.

● மழைக்காலத்தில் பல வெளிநாட்டு பறவைகள் இங்கு கூடுகின்றன.

**5. விழுப்புரம் அருகே மேல்மலைநாடு சரணாலயம்**

● அரிய தாவர இனங்களைக் கொண்டுள்ள பகுதி.

● இங்கு மண், நீர், காற்று ஆகியவற்றின் இயற்கை சமநிலை நன்கு பேணப்பட்டுள்ளது.

**இவை சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாப்பதில் வகிக்கும் பங்கு**

**1. உயிரினப் பன்மை பாதுகாப்பு**

● இயற்கை பூங்காக்கள் மற்றும் சரணாலயங்கள் பல்வேறு விலங்குகள், தாவரங்கள், நுண்ணுயிரிகள் ஆகியவற்றின் வாழ்விடமாக உள்ளன.

● இதன் மூலம் உயிரினங்களின் பன்மை, மரபியல் பல்வகைமை மற்றும் இயற்கை சமநிலை நிலைநிறுத்தப்படுகிறது.

**2. உணவுச் சங்கிலி பராமரிப்பு**

● இயற்கை பூங்காக்களில் புலி, யானை, மான், சிறுத்தை போன்ற விலங்குகள் தங்கள் இயற்கை வாழ்க்கையில் வாழ்வதால், உணவுச் சங்கிலி மற்றும் உயிர்சுழற்சி இயல்பாக நடைபெறுகிறது.

● இதனால் ஒரு இனத்தின் அதிகரிப்பு அல்லது அழிவு தடுக்கப்படுகிறது.

**3. நீர் வளம் மற்றும் மண் பாதுகாப்பு**

● அடர்ந்த காடுகள் மழை நீரை உறிஞ்சி நிலத்தடி நீரை நிரப்புகின்றன.

● மரம் வேர்கள் மண் அரிப்பைத் தடுக்கின்றன.

● இதனால் வெள்ளம், வறட்சி போன்ற பேரழிவுகள் குறைகின்றன.

**4. காலநிலை மாற்றக் கட்டுப்பாடு**

● காடுகள் வளமான கார்பன் உறிஞ்சும் திறனைக் கொண்டவை.

● இதனால் காற்றில் உள்ள தீ வாயுக்கள் குறைந்து வெப்ப மண்டல விளைவு குறைகிறது.

● அத்துடன் இவை மழைப்பொழிவை சீராகவும் பருவ–நிலையை மிதமாகவும் வைத்திருக்கின்றன.

**5. சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி**

● மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இப்பகுதிகளில் உயிரினங்களின் பழக்க வழக்கம், இனப்பெருக்கம் மற்றும் இயற்கை செயல்முறைகளைப் பற்றி நேரடியாகக் கற்கலாம்.

● இதன் மூலம் புதிய பாதுகாப்பு திட்டங்கள் உருவாகின்றன.

**6. பசுமைச் சுற்றுலா வளர்ச்சி**

● இயற்கை பூங்காக்கள் பசுமை சார்ந்த சுற்றுலாவை ஊக்குவிக்கின்றன.

● இதனால் மக்கள் இயற்கையின் மதிப்பை உணர்கிறார்கள். மேலும் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

**தமிழ்நாட்டில் அரசின் முயற்சிகள்**

● புலி பாதுகாப்புத் திட்டம் – புலி இனத்தை அதிகரிக்கும் நோக்கில்.

● யானை பாதுகாப்புத் திட்டம் – யானை வாழ்விடங்களை பாதுகாக்க.

● பசுமை வளர்ச்சி இயக்கம் – மரம் நடுதல் மற்றும் காடு விரிவாக்கம்.

● மக்கள் பங்கேற்பு வன வளர்ச்சி திட்டம் – கிராம மக்களின் ஒத்துழைப்புடன் வனங்களைப் பாதுகாப்பது.

● வன காவல்துறை வலுப்படுத்தல் – வேட்டையாடல் மற்றும் கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கை.

**சவால்கள்**

● சட்டவிரோத வேட்டையாடல் மற்றும் விலங்கு கடத்தல்

● காடுகளை அழிக்கும் மனிதச் செயல்கள்

● நகர வளர்ச்சி மற்றும் சாலை விரிவாக்கம்

● காலநிலை மாற்றத்தால் உயிரின வாழ்விடம் மாற்றம்

● பொருளாதார நிதி பற்றாக்குறை மற்றும் விழிப்புணர்வு குறைவு

தமிழ்நாட்டின் இயற்கை பூங்காக்களும் வனவிலங்கு சரணாலயங்களும் இயற்கையின் இதயமாக விளங்குகின்றன. அவை உயிரினப் பன்மையையும் சுற்றுச்சூழல் சம நிலையையும் காக்கின்றன. மனிதனின் நலனுக்காகவும் எதிர்கால தலைமுறைக்காகவும் இவற்றைப் பாதுகாப்பது கடமை மட்டுமல்ல. அது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பும் ஆகும். இயற்கை வாழ்ந்தால் மனிதனும் வாழ்வான்;

இயற்கை அழிந்தால் வாழ்வும் அழியும். அதனால், இயற்கையை நேசிப்போம் – எதிர்காலத்தை பாதுகாப்போம்.

தகவல் : **வெங்கடேஷ் ம, நிவேதா, ஆ.ல. உதவிப் பேராசிரியர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.**



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW. isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741